# தேசிய வருமானமும் செலவும்

## பொதுவான போக்குகள்

உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ.) 1988 இன் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1989 இல் 2.3 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருளாதாரத்தின் சீரான செயற்பாட்டிற்குத் தடங்கல்களாக இருக்கும் தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களின் மத்தியில் எய்தப்பெற்றமையால் இவ்வளர்ச்சிச் செயலாற்றமானது மிதமானதாயினும் பாராட்டற்குரியதாகும்.

தயாரிப்புத் துறையிலும் பணிகள் துறையிலும் காணப்பட்ட அதிகரித்த நடவடிக்கைகளே 1989 இன் வளர்ச்சிக்குப் பெருமளவு காரணங்களாகின. 1989 இல் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வேளாண்மைத்துறையில் பின்னடைவு ஏற்படாதிருந்திருப்பின் வளர்ச்சிச் செயலாற்றம் இன்னும் சிறப்பாகக் காணப்பட்டிருக்கும். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதார நடவடிக்கைகளில் சிறிது முன்னேற்றம் காணப்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்ட போதிலும் இப்பிரதேசங்களில் காணப்பட்ட உள்நாட்டு மோதல்கள் பொருளாதாரத்தின் பல துறைகளில் தொடர்ந்தும் பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தன. மேலும், குறிப்பாக ஆண்டின் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் நாட்டின் ஏனைய பாகங்களிலும் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்கள் உற்பத்தி நடவடிக்கைகளையும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளையும் வெகுவாகக் குறைவடையச் செய்தன. இந்த மேலதிகக் காரணிகளின் தேறிய விளைவாகப் பொருளாதாரத்தில் மெதுவான வளர்ச்சி காணப்பட்டது. எனினும், பாதுகாப்பு நிலைமைகள் விரைவாக முன்னேற்றமடைந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதிலுமான பொருளாதார நடவடிக்கைகள் உற்சாகம் பெறத் தொடங்கின. 1989 இல் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படுத்திய இன்னுமொரு பாதகமான பொருளாதாரத் தாக்கம் என்னவெனின் நாட்டின் மூலதன இருப்புக்கு முக்கியமாக அரச கட்டடங்கள், போக்குவரத்துக் கருவிகள், தொலைத்தொடர்பு, மின் வசதிகள் என்பனவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களாகும். இச்சேதங்கள் கிடைக்கத்தக்கதாக இருந்த உள்ளமைப்பு வசதிகளைக் குறைத்தன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைவாரியான பங்களிப்புக்களின் பகுப்பாய்வு தயாரிப்பு, பணிகள் ஆகிய துறைகளிலேயே 1989 இன் பொருளாதார வளர்ச்சி செறிந்திருந்ததைக் காட்டுகின்றது. நிதிசார் டணிகள் வர்த்தகமும் பொது நிருவாகமும், பாதுகாப்புத் துணைத்துறைகள் என்பனவற்றின் வளர்ச்சியின் காரணமாக 1989 இல் பணிகள் துறை தொடர்ந்து விரிவடைந்தது. 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த இத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் 69 சதவீதத்திற்கு வகை கூறியது. 4.4 சதவீதத்தினால் விரிவடைந்த தயாரிப்புத்துறை மொத்த வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பு 32 சதவீதமாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தயாரிப்புத்துறையின் கூட்டிய பெறுமதியின் பங்கு 15 சதவீதமாகவே காணப்பட்டது. தயாரிப்புத் துறையின் வளர்ச்சி, உணவு, குடிபானமும் புகையிலையும் என்பவற்றின் கைத்தொழில் வகையில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பினால் தோன்றியதாகும். உணவு குடிபானம், புகையிலை துணைத் துறையுடன் தயாரிப்புத் துறையின் வளர்ச்சிக்குத் தூண்டுவிசையினை வழங்கிய மற்றொரு துணைத்துறை புடவையும் ஆடைகளும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பனவாகும். இதேவேளையில் வேளாண்மைத்துறை முன்னைய ஆண்டின் 2.1 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 1989 இல் 1.1 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

1989 இல் நடைமுறை காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 22,200 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட 12.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றங்களின் குறிகாட்டியான உள்ளடக்க மொ.தே.உ. சுருக்கி 1988 இன் 11.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 9.8 சதவீதத்தினால் உயர்வடைந்து விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் சிறிதளவு வீழ்ச்சிப் போக்கினைப் பிரதிபலித்தது. இதன்படி உண்மை நியதிகளிலான மொ. தே. உ. 1989 இல் 2.2 சதவீதத்தினால் உயர்வடைந்ததாக மதிப்பிடப் பட்டுள்ளது. 1989 இல் வர்த்தக மாற்று வீதங்கள் 6.4 சதவீதத்தினால் மோசமடைந்தன. இதன் விளைவாக மொத்தத் தேசிய உற்பத்தியை வர்த்தக மாற்று வீதத் தாக்கங்களுக்குச் சீராக்கம் செய்யப்பட்டபின் பெறப்படும் உண்மைத் தேசிய வருமானம் 1988 இன் சிறிதளவு வீழ்ச்சிக்கு எதிராக 1.8 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

பதிவாளர் நாயகத்தின் தற்காலிக தரவுகள் 1989 இல் இலங்கையின் குடித்தொகை 1.3 சதவீதத்தினால் 168 இலட்சத்திற்கு அதிகரித்ததை வெளிக் காட்டின. இதன்படி 1989 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 13,237 என (ஐ.அ. டொலர் 367) மதிப்பிடப்பட்டுள்ளது. 1989 இல் உண்மை நியதிகளிலான தலைக்குரிய வருமானம் 0.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

1989 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு செலவினம் மீதான செலவு ரூ. 25,300 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட 13.9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் பேரளவு நியதிகளில் தனியார் நுகர்வுச் செலவு 14.0 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அரச நுகர்வுச் செலவு 12.3 சதவீதத்தினால் உயர்வடைந்தது. தனியார் நுகர்வுச் செலவு உண்மை நியதிகளில் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது. 1988 இல் ஆரம்பமாகிய தனியார் நுகர்வுச் செலவின் தலைகீழ் மாற்றம் 1989 இலும் தொடர்ந்து காணப்பட்டதோடு சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் பெரும் செல்வாக்கைச் செலுத்தின.

1989 இல் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ. 547,220 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட 8.2 சதவீதம் அதிகரித்திருந்தது. எனினும் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் விகிதம் 1988 இன் 22.8 சதவீதத்திலிருந்து 1989 இல் 21.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியைக் காட்டியதோடு ஆய்வுக்குரிய ஆண்டில் உண்மை முதலீட்டில் வீழ்ச்சியையும் காட்டியது.

முதலீட்டுத் தேவைகளை நிறைவு செய்யப் போதுமான சேமிப்புக்களை நாட்டின் பொருளாதாரம் இன்னமும் உருவாக்குவதாக இல்லை. உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 3,060 கோடி அல்லது மொத்தத் தேசிய உற்பத்தியின் 12.1 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளையில், தனியார் பணவனுப்பல்களின் தேறிய உட்பாய்ச்சலைவிட முதலீட்டு வருமானங்களின் தேறிய வெளிப்பாய்ச்சல் உயர்வானதாகக் காணப்பட்டமையால் தேசிய சேமிப்புக்கள் விகிதம் 1988 இன் 14.2 சதவீதத்திலிருந்து 1989 இல் 14.0 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை 1.6

### நிலையான விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1987 – 1989

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ப. ரூ. இ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னையஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) | | மொத்த தேசிய உற பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1987* | 1988* | 1989* | 1987 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 27,409 | 27,984 | 27,666 | 24.2 | 24.1 | 23.3 | 575 | – 318 | 19.8 | – 12.3 |
| 1.1 வேளாண்மை ... | 23,003 | 23,762 | 23,311 | 20.3 | 20.4 | 19.6 | 759 | – 451 | 26.1 | – 17.5 |
| 1.1.1 தேயிலை ... | 2,750 | 2,926 | 2,068 | 2.4 | 2.5 | 2.2 | 176 | – 258 | 6.1 | – 10.0 |
| 1.1.2 இறப்பர் ... | 765 | 770 | 697 | 0.7 | 0.7 | 0.6 | 5 | – 73 | 0.2 | – 2.8 |
| 1.1.3 தெங்கு ... | 2,967 | 2,501 | 3,210 | 2.6 | 2.1 | 2.7 | – 466 | 709 | – 16.0 | 27.5 |
| 1.1.4 நெல் ... | 5,423 | 6,312 | 5,258 | 4.8 | 5.4 | 4.4 | 889 | – 1,054 | 30.6 | – 40.9 |
| 1.1.5 ஏனையவை ... | 11,098 | 11,253 | 11,478 | 9.8 | 9.7 | 9.7 | 155 | 225 | 5.3 | 8.7 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 2,215 | 1,943 | 1,985 | 2.0 | 1.7 | 1.7 | – 272 | 42 | – 9.4 | 1.6 |
| 1.3 கடற்றொழில் ... | 2,191 | 2,279 | 2,370 | 1.9 | 2.0 | 2.0 | 88 | 91 | 3.0 | 3.5 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 3,112 | 3,392 | 3,576 | 2.8 | 2.9 | 3.0 | 280 | 184 | 9.6 | 7.1 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 18,748 | 19,622 | 20,488 | 16.5 | 16.9 | 17.2 | 874 | 866 | 30.1 | 33.6 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,340 | 3,273 | 3,257 | 2.9 | 2.8 | 2.7 | – 67 | – 16 | – 2.3 | – 0.6 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் ... | 13,113 | 14,030 | 14,872 | 11.6 | 12.1 | 12.5 | 917 | 842 | 31.5 | 32.7 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,295 | 2,319 | 2,359 | 2.0 | 2.0 | 2.0 | 24 | 40 | 0.8 | 1.5 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,338 | 8,463 | 8,514 | 7.4 | 7.3 | 7.2 | 125 | 51 | 4.3 | 2.0 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,448 | 1,499 | 1,526 | 1.3 | 1.3 | 1.3 | 51 | 27 | 1.7 | 1.0 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 13,538 | 13,619 | 13,883 | 11.9 | 11.7 | 11.7 | 81 | 264 | 2.8 | 10.2 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 24,496 | 25,164 | 25,588 | 21.6 | 21.7 | 21.5 | 668 | 424 | 23.0 | 16.4 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 5,490 | 5,819 | 6,168 | 4.8 | 5.0 | 5.2 | 329 | 349 | 11.3 | 13.5 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,550 | 3,603 | 3,650 | 3.1 | 3.1 | 3.1 | 53 | 47 | 1.8 | 1.8 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 5,435 | 5,462 | 6,140 | 4.8 | 4.7 | 5.2 | 27 | 678 | 1.0 | 26.3 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,358 | 4,423 | 4,530 | 3.9 | 3.8 | 3.8 | 165 | 107 | 2.2 | 4.1 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 115,922 | 119,050 | 121,729 | 102.3 | 102.4 | 102.5 | 3,28 | 2,679 | 107.6 | 104.0 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | – 2,615 | – 2,836 | – 2,938 | – 2.3 | – 2.4 | – 2.5 | – 221 | – 102 | – 7.6 | 4.0 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 113,307 | 116,214 | 118,791 | 100.0 | 100.0 | 100.0 | 2,907 | 2,577 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**துறைகளின்படியான செயலாற்றம்**

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைகளின்படியான செயலாற்றமும் 1982 நிலையான விலைகளில் கூட்டிய பெறுமதியின் மாற்றங்களும் அட்டவணை 1.6இல் தரப்பட்டுள்ளன. மூன்று முக்கிய பயிர்களான தேயிலை, இறப்பர், நெல் என்பன வற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையின் காரணமாகக் காட்டுத்தொழில், மீன்பிடி என்பவற்றை உள்ளடக்கிய வேளாண்மைத்துறை 1989 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது. வேளாண்மைத்துறையின் கூட்டிய பெறுமதி 1988 இன் 2.1 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1989 இல் 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வேளாண்மைத் துறை கிட்டத்தட்ட 24 சதவீதத்தினை வழங்குகின்றமையால் இத்துறையின் கூட்டிய பெறுமதியின் வீழ்ச்சி 1989 இன் பொதுவான செயலாற்றத்தின் முன்னேற்றத்துக்கான முக்கிய தடையாக இருந்தது.

மரப் பயிர்த்துணைத்துறையினுள் தெங்கின் கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 28 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் தேயிலையினதும் இறப்பரினதும் கூட்டிய பெறுமதிகள் முறையே 8.8 சதவீதத்தினாலும் 9.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இரண்டாம் காலாண்டில் தேயிலை உற்பத்தி முன்னேற்றமடைந்தபோதிலும் முதலாம் காலாண்டில் தேயிலை உற்பத்தி முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியைவிட 20 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. சாதகமற்றவானிலைத் தன்மைகளும் பால் எடுத்தல், பதனிடல் ஆகிய இரு நடவடிச்கைகளிலும் தடங்கல்களை ஏற்படுத்திய உள்நாட்டுக் குழப்பங்களும் ஒன்று சேர்ந்து 1989 இல் இறப்பர் உற்பத்தியின் வெளியீட்டை 10 சதவீதத்தினால் 1,107 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடையச் செய்தன. வேளாண்மைத் துறையினுள் தெங்குத் துணைத்துறை சிறப்பான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. கடந்த இரு ஆண்டுகளிலும் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டிய தெங்கு உற்பத்தி 1988 இல் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகளின் காலங்கடந்த தாக்கத்தின் காரணமாக 1989 இல் 28.3 சதவீதத்தினால் அதிகரித்தது. முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களில் நிலவிய வரட்சி 1988/89 பெரும்போகம், 1989 சிறுபோகம் இரண்டிலும் பயிர்களைப் பாதித்து மொத்த உற்பத்தி வெளியீட்டை 16.7 சதவீதத்தினால் 20.6 இலட்சம் மெற்றிக் தொன்களுக்குக் குறைவடையச் செய்தது.

துணை உணவுப் பயிர் வகையில் முக்கிய இரு பயிர்களான மிளகாயினதும், வெங்காயத்தினதும் அதிகரித்த உற்பத்தி புகையிலை, கரும்பு, பாற்பண்ணை உற்பத்திகள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி அதிகரிப்பு என்பனவற்றின் பெருமளவு காரணமாக 1989 இல் ஏனைய வேளாண்மைத்துறையின் கூட்டிய பெறுமதி 2.0 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய வேளாண்மைத் துணைத் துறையின் கூட்டிய பெறுமதியில் 20 சதவீதத்திற்கு வகைகூறும் கோழிப்பண்ணை மற்றும் கால்நடைப் பண்ணை என்பனவற்றின் பால், முட்டை உற்பத்தி 7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்து, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றமான செயலாற்றத்தைக் காட்டியது. இதேவேளையில் மீன்பிடித் துறையின் கூட்டிய பெறுமதி 1989 இல் 4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1989 இல் சுரங்க அகழ்வு கல்லுடைத்தல் துறையின் கூட்டிய பெறுமதி 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சிக்

கான முக்கிய பங்களிப்பு, இவ்வாண்டில் உற்பத்தி வெளியீட்டில் 30 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த கனிப்பொருள் மணல்களிலிருந்து கிடைக்கப் பெற்றது. நாட்டில் நிலவிய குழப்ப நிலைமைகளின் காரணமாக அகழ்வு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமையால் காரீய உற்பத்தியின் வெளியீடு 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சுரங்க அகழ்வு கல்லுடைத்தல் துறையின் முதன்மை வளர்ச்சித் துணைத்துறையாக விளங்கிய இரத்தினக்கல் அகழ்வு 1989 இல் எதிர்பார்ப்புக்களை விடக் குறைவான செயலாற்றத்தைக் கொண்டிருந்தது.

வேளாண்மை பதனிடல், தொழிற்சாலைக் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கிய தயாரிப்புத் துறையின் வளர்ச்சி 1989 இல் 4.4 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தயாரிப்புத் துறையின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கிற்குப் பங்களிப்புச் செய்த தொழிற்சாலைக் கைத்தொழிலின் உற்பத்தி வெளியீடு 6 சதவீதத்தினால் விரிவடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையினுள் தனியார் துறைக் கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி 15 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பெருமளவு ஊழியர்கள் வேலைக்கு வராமையினதும் வேலைகள் நிறுத்தப்பட்டமையினதும் காரணமாக அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களின் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

தொழிற்சாலைக் கைத்தொழில் வகையினுள் கூட்டிய பெறுமதி நியதிகளில் மிகப் பெரிய துணைத்துறையாக உணவு, குடிபானம், புகையிலைக் கைத்தொழில் வகையின் உற்பத்தி வெளியீடு 12 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உணவும் குடிபானமும் கைத்தொழில் வகையில் பெரிய கைத்தொழில்களின் உள்ளீடுகளான புகையிலை, கரும்பு, கள், பால் என்பனவற்றின் உற்பத்தி அதிகரிப்பு இத்துணைத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

ஏற்றுமதி அடிப்படையிலான தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் என்பனவற்றின் வேளாண்மைப் பதனிடலின் மதிப்பிடப்பட்ட கூட்டிய பெறுமதி 1989 இல் உண்மை நியதிகளில் 0.5 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் உற்பத்தி 1989 இல் 1988 ஐவிட 112 சதவீதத்தினால் அதிகரித்தபோதிலும், தேயிலை, இறப்பர் என்பனவற்றின் பதனிடலினூடான கூட்டிய பெறுமதியிலேற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்ய இது போதுமானதாகக் காணப்படவில்லை. இதேவேளையில் 1989 இல் சிறு கைத்தொழில்கள் துணைத்துறையின் உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு முறைசாரா இத்துணைத் துறைக்கான கொடுகடன்களின் அதிகரித்த கிடைக்கத்தக்க தன்மையும், சந்தை வசதிகளை வழங்குவதில் முக்கியமாக அரச அமைப்புக்களின் நிறுவன ரீதியான ஆதரவும் காரணங்களாக விளங்கின.

1988 இல் 1.5 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்த கட்டுமானத்துறை 1989 இல் சிறிதளவாக 0.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அரச மூலதனச் செலவில் ஏற்பட்ட சுருக்கம் கட்டுமானத்துறையின் வேகம் குறைவடைவதற்கான குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

1989 இல் பணிகள் துறை 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டில் பணிகள் துறையின் விரிவாக்கம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மொத்த அதிகரிப்பில் கிட்டத்தட்ட 69 சதவீதத்திற்கு வகை கூறியது. வங்கித் தொழில் காப்புறுதியும் உண்மைச் சொத்தும், வர்த்தகம் மற்றும் பொது நிருவாகமும் பாதுகாப்பும், பாதுகாப்புத் துணைத் துறைகள் என்பன சார்பு ரீதியில் உயர்ந்த வளர்ச்சி வீதங்களினைப் பதிவு செய்தன. பணிகள் துறையினுள் மின்வலு, வாயு, தண்ணீரும் நலப்பணிகளும் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி 1.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், முன்னைய ஆண்டில் இத் துணைத் துறை 3.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. 1988 உடன் ஒப்பிடுகை யில் 1989 இல் வான் வழிப் பணிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றமான செய லாற்றத்தைக் கொண்டிருந்ததையும், துறைமுகமும் தொடர்பான பணிகளும் வளர்ச்சியடைந்தமையையும் தொடர்ந்து போக்குவரத்துக் களஞ்சியப்படுத்தல் தொடர்புப் பணிகள் துணைத்துறை உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. கடந்த காலத்திலான மிகப்பெரிய படுகடன் பழுவிற்கும் அதனால் ஏற்பட்ட படுகடன் பணிக் கொடுப்பனவுச் செலவுகளுக்கும் 20 சதவீத எரிபொருள் செலவு அதிகரிப்புக்கும் மத்தியிலும் ஏயர் லங்கா நிறுவனம் 1989 இல் தேறிய இலாபத்தினைப் பதிவுசெய்தது.

## செலவினம்

நடைமுறைச் சந்தை விலைகளில் 1989 இன் மொத்த உள்நாட்டுச் செலவு (மொ.உ.செ.) ரூ. 27,690 கோடியாக விளங்கி, முன்னைய ஆண்டைவிட 12.6 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. 1989 இல் மொத்த நுகர்வுச் செலவு 13.8 சதவீதத்தினால் ரூ. 22,200 கோடிக்கு அதிகரித்தது. தனியார் நுகர்வுச் செலவு 14.0 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் அரசின் நுகர்வுச் செலவு 12.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அரசின் சம்பளப் பட்டியலில் கணிசமான 16.8 சதவீத அதிகரிப்பு, பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான பொருட்களினதும் பணிகளினதும் அதிகரித்த செலவு என்பன அரசின் செலவின அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன.

முக்கியமாக அரிசி, சீனி, மீன் உற்பத்திகள், பால் உணவுப் பொருட்கள், மருந்தாக்கற் பொருட்கள் போன்ற உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்ததைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவு 33 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மேலும் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பு இறக்குமதி செய்யப்பட்ட நீடித்துழைக்கும் பொருட்களின் நுகர்வின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. இறக்கு மதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள், காரணியல்லாப் பணிகள் என்பன மீதான இணைந்த நுகர்வுச் செலவு 29 சதவீதத்தினால் அதிகரித்தது.

நடைமுறை விலைகளில் இருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (மொ.உ.மூ.ஆ.) 1989 இல் ரூ. 547,220 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 10.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.2 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1989 இல் தனியார் துறையினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த மூலதன ஆக்கம் ரூ. 434,990 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த முதலீட்டில் கிட்டத்தட்ட 80 சதவீதத்திற்கு வகை கூறியது. மத்திய அரசின் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் அரசின் செலவு சுருக்கப்பட்டதைத்

அட்டவணை 1.7

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1978—1989

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ ரூ.) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1978 | | 1987* | | 1988* | | 1989* | | | |
| | 1978 | 1987* | 1988* | 1989* | தொகை ப.இ. ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ | % | தொகை ப.இ.ரூ. | % | 1987 இற்கு மேலாக 1988 | 1988 இற்கு மேலாக 1989 |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 266,946 | 303,753 | 345,396 | 59,537 | 100 | 91,192 | 100 | 93,469 | 100 | 94,491 | 100 | 2.5 | 1.1 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 196,723 | 221,982 | 252,785 | 42,665 | 72 | 65,480 | 72 | 67,243 | 72 | 68,790 | 73 | 2.7 | 2.3 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 16,872 | 70,223 | 81,771 | 92,611 | 16,872 | 28 | 25,712 | 28 | 26,226 | 28 | 25,701 | 27 | 2.0 | — 2.0 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 266,946 | 303,753 | 345,396 | 59,537 | 100 | 91,192 | 100 | 93,469 | 100 | 94,491 | 100 | 2.5 | 1.1 |
| 2.1. நுகர்வு ... | 36,148 | 171,487 | 195,306 | 222,208 | 36,148 | 61 | 54,659 | 60 | 56,290 | 60 | 57,472 | 61 | 3.0 | 2.1 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 45,752 | 49,961 | 54,249 | 8,521 | 14 | 14,976 | 16 | 14,746 | 16 | 13,653 | 14 | — 1.5 | — 7.4 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (11,216) | (12,805) | (11,223) | (3,077) | (5) | (4,299) | (4) | (4,369) | (5) | (3,670) | (4) | 1.6 | — 16.0 |
| 2.2.2. அரச கூட்டுத்தாபனங்கள் | (2,056) | (34,536) | (37,156) | (43,026) | (2.056) | (3) | (10,677) | (12) | (10,377) | (11) | (9,983) | (10) | — 2.8 | --3.8 |
| 2.2.3. தனியார் துறை ... | (3,388) | | | | (3,388) | (6) | | | | | | | | |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 148 | 601 | 473 | 33 | — | 37 | — | 128 | — | 102 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 14,835 | 49,559 | 57,885 | 68,466 | 14,835 | 25 | 21,520 | 24 | 22,305 | 24 | 23,264 | 25 | 3.6 | 4.3 |

*தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தொடர்ந்து ரூ. 131,250 இலட்சத்திலிருந்து ரூ. 112,230 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சந்தை விலைகளில் மொ.உ. உற்பத்தியில்,மொ.உ.மூ. ஆக்கம் 1988 இன் 22.8 சதவீதத்திலிருந்து, 1989 இல் 21.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து உண்மை முதலீடுகளின் வீழ்ச்சியினைப் பிரதிபலித்தது.

நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் (மொ.உ.நி.மூ.ஆ.) 8.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. (கட்டடப் பொருட்கள் தவிர்ந்த) மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளின் கொ.கா.க. பெறுமதி 1988 இன் 3.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் 3.3 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

கடந்த அண்மைக் காலங்களில் பொறிகளினதும் கருவிகளினதும் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புக்களைக் காட்டியபோதிலும் பொருளாதாரத்தினுள் மூல தனப் பொருட்களின் உட்பாய்ச்சல் பெரும்பாலும் இறக்குமதிகளினூடானதா தாகவே இருந்தது. தனியார் துறையினதும் அரச துறையினதும் இறப்பர் உடைமைகளில் மீள் நடப்பட்ட ஏக்கர்களின் அதிகரிப்புக் காரணமாக 1989 இல் மீள் நடுகை உட்பட காணி அபிவிருத்தியின் மூலதன ஆக்கம் 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 1.8

தேசிய சேமிப்புகள் 1987—1989

(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | | 1987* | 1988* | 1989* |
|---|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | | 196,723 | 221,982 | 252,785 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் | ... | 25,236 | 26,576 | 30,577 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | ... | —4,336 | —5,266 | — 5,906 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | ... | 9,161 | 10,137 | 10,844 |
| 5. தேசிய சேமிப்புகள் | ... | 30,060 | 31,597 | 35,515 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 2) | ... | 12.8 | 12.2 | 12.1 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) | .. | 15.3 | 14.2 | 14.0 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்

1989 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 34,500 கோடியாக விளங்கின. இதில் 64.0 சதவீதம் நுகர்வின்மீது செலவிடப்பட்டது. 16.0 சதவீதம் முதலீட்டுக்கு வழிப்படுத்தப்பட்டு 19.8 சதவீதம் பொருட்களின் ஏற்றுமதிகள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் மீதானதாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.9

## நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசியச் செலவு

| வகை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | முன்னைய ஆண்டின் மேல் சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 1987* | 1988* | 1989* | 1988 | 1989 |
| 1. தனியார் நுகர்வு ... | 151,949 | 173,457 | 197,680 | 14.2 | 14.0 |
| 2. அரசின் நுகர்வு ... | 19,538 | 21,849 | 24,528 | 11.8 | 12.3 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ... | 45,900 | 50,562 | 54,722 | 10.2 | 8.2 |
| 4. மொத்த உள்நாட்டுச் செலவு ... | 217,387 | 245.868 | 276,930 | 13.1 | 12.6 |
| 5. தேறிய வெளிநாட்டு முதலீடு ... | −10,538 | — 12,377 | −12,9?7 | — | — |
| 6. கழிவு: பன்னாட்டு நன்கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் ... | 14,463 | 16,774 | −17,034 | — | — |
| 7. மொத்தத் தேசிய செலவு ... | 192,386 | 216,717 | 246,899 | 12.6 | 13.9 |

* தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1978 இன் நிலையான விலைகளில் மொத்த மூலவளக் கிடைத்தல் 1988 இன் 2.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் 1.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. உண்மை நியதிகளில் மூலவளங்களின் வீழ்ச்சிக்குக் குறைந்த இறக்குமதிகளும் ஆய்வின் கீழுள்ள ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சிறிது மிதமான வளர்ச்சியுமே காரணங்களாகின. இந்த மூலவளங்களின் பயன்பாட்டின்போது நுகர்வும் ஏற்றுமதிகளும் உண்மை வளர்ச்சியைப் பதிவுசெய்ததாக மதிப்பிடப்பட்டுள்ளவேளையில் முதலீட்டில் சுருக்கமொன்று காணப்பட்டது.